யடிநுவர பிரதேச சபை
கண்டி மாவட்டம்

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019மார்ச் 27 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2019 மே 31 மற்றும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஜுன் 30 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின்முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைபிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்துநிதிக்கூற்றுகளின் 2018 திசெம்பர் 31 இல் யடிநுவர பிரதேச சபையின் நிதிநிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார்செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

1.3.1 கணக்கீடு குறைபாடுகள

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 1,112,000 ஆன கெப் வண்டியொன்றின் பெறுமதி நிதிக் கூற்றுக்கல் அகற்றப்பட்டிருந்தது. | கணக்குகளை சரி செய்து கொள்ள வேண்டும். | 2019 ஆண்டில் நிதிக் கூற்றுகளினூடாக சரி செய்கிறேன். |
| (ஆ) | மீளாய்வாண்டினுள் முற்பண வருமான கணக்கில் மீதி ரூபா 399,028 கூடுதலாகவும், பிடியாணை கட்டண பில் இடல் ரூபா 133,717 குறைத்தும், 03 வேலைகளுக்குரிய கடன் கொடுத்தோர் மீதி ரூபா 167,210 கூடுதலாகவும் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிட்டிருந்தன. | கணக்குகளை சரி செய்து கொள்ள வேண்டும். | 2019 ஆண்டில் நிதிக் கூற்றுகளினூடாக சரி செய்கிறேன். |
| (இ) | ஆண்டினுள் செலுத்திய ரூபா 3,170,966 ஆன கடன் தவணைகள் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருநதது. | கணக்குகளை சரி செய்து கொள்ள வேண்டும். | எதிர் காலத்தில்,இத் தவறை சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஈ) | மீளாய்வாண்டினுள் ஒப்பநதம் கைச்சாத்திடப்படாத,ரூபா 400,000 பெறுமதியான 02 வேலைகள், வேைலை கடன் கோடுத்தோரின் கீழ் காட்டப்பட்டிருந்ததுடன், பணம் செலுத்தாத ரூபா 398,595 பெறுமதியான 02 வேலைகள் கடன் கொடுத்தோராக இனங்காணப்பட்டிருக்கவில்லை. | கணக்குகளை சரி செய்து கொள்ள வேண்டும். | 2019 ஆண்டில் நிதிக் கூற்றுகளினூடாக சரி செய்கிறேன். |

| | | |
|---|---|---|
| (உ) மீளாய்வாண்டினுள், கிடைத்த ரூபா 444,307 ஆன வரி பணத்தை வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்குகளை சரி செய்து கொள்ள வேண்டும். | காணி விற்பனை மீது வரி தொகை குறுக்கு பதிவினூடாக திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. |
| (ஊ) 2011 ஆண்டினுள் சபைக்கு அன்பளிப்பாக கிடைத்திருந்த புகை கருவின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். | பெறுமதியை மதிப்பீடு செய்து எதிர் காலத்தில் கணக்கீடு செய்கிறேன். |

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 03 கணக்கு விடயங்களின் நிதிக் கூற்றுக்கள் பிரகாரம் மீதி மற்றும் துணை பதிவேடுகள் பிரகாரம் மீதிகளிடையில் ரூபா 4,980,739 இணங்காமை நிலவியது. | வித்திதயாசத்தை ஒப்பிட்டுகணக்குகளை சீர் செய்ய வேண்டும். | கணக்களுடன் இணக்கஞ் செய்து எததிர் காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) பெற வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு பெற வேண்டிய 08 கணக்கு விடயங்களில் கூட்டுப் பெறுமதி ரூபா 124,382,593 ஆனதுடன், அவற்றில்05 ஆண்டுகளை விஞ்சியிருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகைரூபா 3,748,673 ஆனதுடன், 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளுக்கும் இடையிலான காலத்தினுள் நிலுவை கணக்கு மீதிகளில் கூட்டுத் தொகை ரூபா 63,109,684 ஆக இருந்தது. | கிடைக்க வேண்டிய மீதிகள் அறவிடுவதற்க நடவடிக்கை எடுக்க வேண்டும் | பெற வேண்டிய பணத்திலிருந்து ரூபா 21,913,136 இப்போது கிடைத்துள்ளதுடன், எஞ்சிய ரூபா 102,469,457 ஆன பணத்தை எதிர் காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

| | | |
|---|---|---|
| 05 ஆண்டு காலமொன்று விஞ்சியிருந்த செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 1,720,914 ஆனதுடன், 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளிற்கும் இடையிலான காலத்தினுள் செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளில் கூட்டுத் தொகை ரூபா 4,508,437 ஆக இருந்தது. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்க்க வேண்டும் | செலுத்த வேண்டிய பணத்திலிருந்து ரூபா 20,672,840 பதில் வழங்கும் திகதி வரையும் செலுத்தப்பட்டிருந்தது. |

1.3.4 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உறுதி அல்லது ஒப்படை கட்டளை, கடன் பட்டோர் பதிவேடு மற்றும் அட்டவணை போன்ற தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாததால், கூட்டுத் தொகை ரூபா 14,470,540 ஆன 02 கணக்கு விடயங்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாக ஒப்பாய்வு செய்ய முடியவில்லை. | நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்படும் மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகளை கணக்காய்விற்கு சமர்பிக்க வேண்டும். | உறுதி தயாரித்துக் கொள்ள எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கை எடுப்பதாகவும், நானாவித கடன்பட்டோர் மீதியிலிருந்து ரூபா 473,640 தொகை 2017 முதல் நிலவி வருவதுடன், துணைப் பதிவேடுகளை கண்டறிய முடியாதுள்ளதாகவும் அறிவிக்கிறேன். |

1.4 இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும்முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள்,பிரமாணங்கள் மற்றும முகாமை தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடனான தொடர்பு | | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| | நிதிப் பிரமாணம் 571 | 2012 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரை 120 சந்தர்ப்பங்களில் கிடைத்திருந்த வேலை நிறுத்தி வைக்கும் வைப்புபை, விடிவிக்க அல்லது வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |
| (ஆ) | 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதி கோவை | | | |
| (i) | 19 ஆம் பிரிவு | அனைத்து அடி | அடி இதழ்லுடன் | சரி செய்ய |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இதழ் சேர் புத்தகங்களும் சபையின் செயலாளரின் பொறுப்பின் இருக்க வேண்டிய போதும்,அவை களஞ்சியத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தரின் பொறுப்பில் இருந்தன. | கூடிய புத்தகங்களை சபை செயலாளரின் பொறுப்பில் வைத்துக்கொள்ள வேண்டும். | நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ii) | 61 ஆம் பிரிவு | கைத்தொழில், வியாபாரங்கள் மற்றும் தொழில்கள் தொடர்பாக வரி செலத்த வேண்டிய வியாபாரங்கள் மீதான கணிப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு, பதிவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கணிப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு, பதிவிட வேண்டும். | எதிர்காலத்தில் சரியான முறைமையொன்றின் படி, பதிவிட நடவடிக்கை எடுக்கிறேன். |
| (இ) | பெறுகைகள் வழிகாட்டி கோவை | | | |
| (i) | 4.2 (இ)பந்தி | மீளாய்வாண்டிற்காக விரிவான பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | எதிர் காலத்தில், சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ii) | 4.2.2(அ)பந்தி | பெறுகைகள் நேரசூசியொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைகள் நேரசூசியொன்று தயாரிக்க வேண்டும். | எதிர் காலத்தில், சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஈ) | 1971 இன் 48 ஆம் இலக்க உள்ளூராட்சி மீதான விஷேட ஏற்பாட்டு சட்டம் மற்றும் 2008 திசெம்பர் 31 திகதிய 434 இலக்க பொது நிதி சுற்றறிக்கை. | 05 ஆண்டுகளிற்கு ஒரு முறை புதிய பெறுமதி மதிப்பீடு மேற்கொள்ள வேண்டிய போதும், 2006 ஆண்டிற்கு பின் புதிய பெறுமதி மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வீத வரி மதிப்பீடு குறித்த காலத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். | 2018 ஜுன் 14 ஆம் திகதி புதிய மதிப்பீடொனறை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் புதிய மதிப்பீட்டின் மீது வரி அறவிபடுவதாக அறிவிக்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானசபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 36,551,386ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 42,381,202ஆனது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம்,பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாகமுன்வைக்கப்பட்டமதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | வருமான மூலம் | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i | வீத வரி மற்றும் குத்தகை | 3,469,560 | 3,461,239 | 3,063,167 | 2,944,787 | 4,780,560 | 4,833,422 | 5,086,060 | 3,534,914 |
| ii | வாடகை | 250,000 | 201,665 | 201,665 | - | 240,000 | 87,000 | 87,000 | - |
| iii | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,400,000 | 1,558,800 | 1,558,000 | 11,145 | 2,450,000 | 2,268,350 | 2,268,350 | 11,145 |
| iv | ஏனைய வருமானம | 46,450,000 | 38,068,405 | 9,694,359 | 94,478,179 | 49,758,520 | 40,494,541 | 19,449,172 | 65,549,527 |
| | கூட்டுத் தொகை | 51,569,560 | 43,290,109 | 14,517,991 | 97,434,111 | 57,229,080 | 47,683,313 | 26,890,582 | 69,095,586 |

#### 2.2.2 வீத வரி மற்றும் குத்தகை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கு பில் இடப்பட்ட வித வரி ரூபா 3,461,239 இலிருந்து ரூபா 1,617,856 அல்லது, 47 சதவீம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நடமாடும் சேவைகள் மற்றும் சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டு பில் நிலுவையை குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | 2017 திசெம்பர் 31 திகதிக்கு நிலவிய நிலுவை வித வரி மீதியான ரூபா 3,211,443 யிலிருந்து மீளாய்வாண்டினுள் ரூபா 1,997,199 அல்லது, 62 சதவீதம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வீத வரி அறவிட வேண்டும். | வருமான சேகரிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின்னூடாக நிலுவை மீதிகளை அறவிடுவதற்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (இ) | 10 ஆண்டுகள் முதல் 13 ஆண்டுகள் இடையிலான கால பகுதியிலிருந்து பில் இடப்பட்டுக்கொண்டு நிலவிய 72 அரச ஆதனங்களிலிருந்து அறவிட வேண்டிய வீத வரி ரூபா 960,020 அறவிடவதற்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வீத வரி அறவிட வேண்டும். | குறித்த அரச நிறுவனங்களை அறிவூட்டிய போதும், நிலுவை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

2.2.3 நீதி மன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 திதிக்கு பெற வேண்டியதாக இருந்தநீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்ரூபா 1,672,246 மற்றும்ரூபா 92,474,328 ஆனது. | பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்தைபெற்றுக்கொள்ள வேண்டும். | பணத்தை அழைப்பித்துக்கொள்ள தேவையான நடவடிக்கை எடுக்கிறேன். |

3 செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும்,மக்கள் நலன், இலகுமற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத் தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(அ) ஒதுக்கீடு மேற்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டினுள் பாதீட்டினூடாக ஏற்பாடு செய்யாத,ரூபா 128,758 தொகையொன்று வட்டி செலுத்துவதற்காக செலவிக்கப்பட்டிருந்தது. | தேவையான ஒதுக்கீடு ஏற்பாடு செய்துக்கொள்ள வேண்டும். | எதிர் காலத்தில், இவ்வாறான தவறுகள் செய்யாதிருக்கிறேன். |

(ஆ) வேலைகள் மேற்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் 02 மூலதன செலவின விடயங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 1,150,000 ஆன தொகையிலிருந்து ரூபா 943,918 எதிர்பார்த்த வேலைகளுக்காக பயன்படத்தியிருக்கவில்லை. | ஒதுக்கீடு நோக்கங்கள் பிரகாரம், பயன்படுத்த வேுண்டும். | கருத்துகளை தெரிவிக்கவில்லை. |

(இ) கழிவுப் பொருள் முகாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டினுள் பசளை களஞ்சிய் படுத்துவதற்கான அறையொன்றை மற்றும்தட்டு முறையில் கொம்போஸ்ட் | கொம்போஸ்ட் கொட்டில் நிர்மாணிப்பதற்கு | ஒதுக்கீடு போதாமையினால், இந்த ஆண்டினுள் |

| | | |
|---|---|---|
| கொட்டில் ஒன்றை நிர்மாணிப்பதற்கு ரூபா 1,000,000 ஆன தொகையொன்று பாதீட்டினூடாக ஏற்பாடு செய்த போதும், குறித்த வேலை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்க வேண்டும். | அந் நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைபடுத்த எதிர்பார்க்கப்படுகிறது. |

(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பாக பொது நலவாய நாடுகளின் ஆண்டு 2030 நிகழ்சி நிரல் பிரகாரம், ஒவ்வொறு அரச நிருவனமும் செயற்பட வேண்டிய போதும்,மீளாய்வாண்டு தொடர்பாக சபை தனது விடய பரப்பின் கீழ் வரும் விடயங்கள் தொடர்பாகஎவ்வாறு செயற்பட வேண்டும் என்பது பற்றி அறிந்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பாக பொது நலவாய நாடுகளின் ஆண்டு 2030 நிகழ்சி நிரல்தொடர்பாகசபை கவனம் செலுத்த வேண்டும். | எதிர் காலத்தில், விஷேட கவனம் செலுத்துகிறேன். |
| (ii) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள், இலக்குகளை நோக்கி சென்றடைய வேண்டிய இடங்கள், இலக்கை அடைவதனை அளவிடுவதற்கான குறிகாட்டிகளை இனங்காண நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளும் குறிகாட்டிகளை இனங்காண நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர் காலத்தில், விஷேட கவனம் செலுத்துகிறேன். |

3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அனுமதியின்றிய நிர்மாணங்கள் தொடர்பாக உள்ள L 20868, 85317 இலக்க ,85316 இலக்க மற்றும் ரீட் 19/2015 இலக்ககொண்ட வழக்குகளுக்குரிய தீர்பு வழங்கப்பட்டு, நீண்ட காலம் கடந்திருந்த போதும், வழக்கு தீர்ப்பு பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக நீதிமன்ற கட்டளை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | வழக்கரிஞர் ஆலோசனை பிரகாரம் உடனடியாக நடவடிக்கை எடுக்கிறேன். |

3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டு இறுதியில் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை இணக்கஞ் செய்யும் போது, 08 பதவிகளில் 12 வெற்றிடங்கள் நிலவின. | அங்கீகரிக்கப்பட்ட ஆளணி நிரப்பிக் கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும். | ஆட்சேர்ப்பதற்கான அங்கீகாரம் தற்போது கோரப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 06 மாதங்கள் முதல் 07 வருடங்கள் வரை கால வீச்சல் கடந்திருந்த போதும், இடமாற்றம் பெற்று சென்ற, ஓய்வு பெற்ற மற்றும் சேவையை கைவிட்டுச்சென்ற மூன்று உத்தியோகத்தர்களின் ரூபா 377,541 ஆன கடன் மீதியை அறவிட்டிருக்கவில்லை. | கடன் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும. | பணம் அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கிறேன். |

3.4 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான 06 நீர் உத்தேசத் திட்டங்களில் நீர் எவ்வித சுத்திகரிப்புமின்றி 575 நீர் பாவனையாளர்களுக்கு விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | சுதிதிகரித்த நீர் விநியோகிக்கப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். | தற்போது அனைத்து உத்தேச நீர் திட்டங்களிலும் நீரை பரீட்சித்து குளோரீன் இடப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2013 ஆண்டின் போது, அதிகார பிரதேசத்தினுள் முன்னேற்றம் அடைந்த பிரதேசங்களாக இனங்கண்ட 05 பிரதேசங்களில் ஆதனங்களிலிருந்து வீத வரி அறவிட மீளாய்வாண்டு இறுதி வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மதிப்பீட்டு பெறுமானத்தின் மீது வீத வரி அறவிட வேண்டும். | முன்னேற்றம் அடைந்த 05 பிரதேசங்களை இனங்கண்டிருந்ததுட, அவற்றை மதிப்பீடு செய்து வீத வரி அறவிடுவதற்க நடவடிக்கை எடுக்கிறேன். |

3.5 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கெப் வண்டியின் பதிவு செய்யும் புத்தகம் பிரகாரம், இருந்த என்ஜின் இலக்கத்திற்க மாற்றமான இலக்கமொன்று அங்கு என்ஜினில் இருந்தது. மேலும், என்ஜினை மாற்றுவது தொடர்பாக எவ்வித சான்றுகளும் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை. | பரிசீலனை செய்து தேவையான நடவடிக்கைள் எடுக்க வேண்டும். | உள்ளூராட்சி ஆணையாளர் இது தொடர்பாக ஆரம்ப விசாரணை ஒன்றை மேற்கொள்ளுமாறு எனக்கும் ஓர் பிரதியுடன் கண்டி உள்ளூராட்சி உதவி ஆணையாளரிற்கு அறிவித்து அனுப்பியுள்ளதாக குறிப்பிடுகிறேன். |

3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

3.6.1 சொத்துக்களின் பாதுகாப்பபை உறுதிப்படுத்தப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான பழைய பிரதேச சபை கட்டடிடத்தின் கீழ் மாடியில் 01 ஆம் இலக்க கடையறை ஒழுங்கற்றதாக வெளித்தரப்பினர் ஒருவரின் பயன்பாட்டிற்கு விடப்பட்டிருந்தது. | சபைக்கு சொந்தமான ஆதனங்களை ஒழுங்காக ஒப்படைக்க வேண்டும் | முன் நடவடிக்கைகள் எடுப்பதற்காக தேவையான தகவல்கள் உள்ளூராட்ச்சி திணைக்களத்திற்க அனுப்பப்பட்டுள்ளது. |
| (ஆ) | சுவீகரிக்கப்படாத சொத்துக்கள் | | |
| | மீளாய்வாண்டினுள் கணககீடு செய்யப்பட்டிருந்த சபைக்கு சொந்தமில்லாத 02 வாகனங்களை சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உரிமையைசுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில், நடவடிக்கை எடுக்கிறேன். |

3.6.2 விளைவற்ற/குறைபயன்பாட்டுச் சொத்தக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான ரூபா 4,960,516 பெறுமதியான 11 நிலையான சொத்து விடயங்கள் விளைவற்று மற்றும் குறைபயன்பாட்டுடன் நிலவின. | சபைக்கு சொந்தமான சொத்துக்களை பயன்படுத்த வேண்டும். | 02 வாகனங்களை எதிர்காலத்தில் பழுதுபார்த்து பயன்படுத்துவதாகவும், இன்னும் வாகனங்களை ஏலத்தில் விற்க நடவடிக்கை எடுப்பதாகவும், ஒரு டெக்டர் வண்டியை ஆகரபதன பிரதேச சபைக்கு வழங்கியுள்ளதாகவும் மற்றும் கல்வனைஸ் குழாய்களை வருமானம் ஈட்ட பயன்படுத்துவதாகவும் குறிப்பிடுகிறேன். |

3.7 பெறுகைகள்

3.7.1 பெறுகைகள் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டினுள் ரூபா 58,836,218 ஆன பெறுகைகள் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும்,பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்க வேண்டும். | 2018 ஆண்டின் போது தயாரிக்கப்பட்டிருக்காத துடன், 2019 ஆண்டில் தயாரிக்கப்பட்டுள்ளது. |

3.7.2 ஒப்பந்த நிருவாகம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கன்னொருவ மேற்கு பொருத்து பாளத்திற்கு அருகில் கால்வாய் கட்டை அபிவிருத்தி செய்கையில் அங்கீகாரம் பெற்ப்படாமல் மற்றும் மதிப்பீடு பிரகாரம் நிர்மாணிக்கப்பட வேண்டிய நீளம் மீ. 9.10 ஆன தடுப்பு மதிலிற்கு பதிலாக நீளம் மீ 10.06 ஆன தடுப்பு மதில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது.தடுப்பு மதிலின் ஒவ்வொறு அடுக்கு தட்டினதும் உயரம் மீ 0.45 ஆக வேண்டிய போதும், அளவு புத்தகத்தின் படி, அதன் உயரம் மீ 0.35 மாத்திரமாகையால், மதில் உயரத்தில் ஒரு அடியளவு குறைந்த போதும், மதிப்பீட்டின் படி நிர்மாணம் மேற்கொள்ளாது,ரூபா 111,843 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | மதிப்பீட்டின் படி நிர்மாணம் மேற்கொள்ளப்பட வேண்டும். | திட்டங்களிற்கு அமைய, நிர்மாணிக்கையில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதுடன், மாற்றங்களுக்காக அங்கீகாரம் பெற்றுக் கொள்ளும் உரிய முறைமையொன்றை தயாரித்துக் கொள்கிறேன். |